செ.வெ.எண்: 545 நாள்: 26.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**உலக சுற்றுலா தினத்தையொட்டி சிறப்பு சுற்றுலா பயணங்களின் வாகனங்களை**

**மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக சுற்றுலா தினத்தையொட்டி சிறப்பு சுற்றுலா பயணங்களின் வாகனங்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் இன்று (26.09.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் ஒரு குழுவாகவும், விளையாட்டு விடுதி மாணவிகள் ஒரு குழுவாகவும், பொதுமக்கள் ஒரு குழுவாகவும் என 3 குழுக்கள் தனித்தனியாக பேருந்துகளில் பயணம் செய்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல்வேறு சுற்றுலாதலங்களை இன்றையதினம் பார்வையிடவுள்ளார்கள். இப்பயணம் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சுற்றுலா பயணம் பொழுதுபோக்கிற்கு மட்டுமல்லாமல், பல்வேறு நல்ல தகவல்களை கற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும். ஏனெனில் சித்தனவாசல் ஓவியங்கள் உலக பிரசித்தி பெற்றவை. இதேபோன்று திருமயம் கோட்டை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வாய்ந்த இடங்களுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ளார்கள். எனவே இச்சுற்றுலாவில் கலந்துகொள்பவர்களுக்கு இது பயனுள்ளதாக அமையும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஆட்சியில் தமிழகத்தில் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட்டு, தமிழகத்திற்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து வருவாய் ஈட்டும் வகையில் சுற்றுலாத்துறையின் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

பயணத்திட்டம் -1ல் ஆ.மணிகண்டன் நிறுவனர், புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக்கழகம் தலைமையில் மலையடிப்பட்டி, குன்றாண்டார்கோவில், விசலூர், நார்த்தாமலை கடம்பர் கோவில், நார்த்தாமலை விசையாலசோழீஸ்வரம் ஆகிய பகுதிகளுக்கும், பயணத்திட்டம் -2ல் பேராசிரியர் சு.ராசவேலு அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி அவர்கள் தலைமையில் ராஜகுளத்தூர், குடுமியான்மலை, கொடும்பாளூர், திருக்கோகர்ணம் ஆகிய பகுதிகளுக்கும், பயணத்திட்டம் -3ல் முனைவர் ஜெ.ராஜா முகமது (பணி ஓய்வு) இணை இயக்குநர், அருங்காட்சியகத்துறை, கரு.ராசேந்திரன் தலைவர் புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக்கழகம் ஆகியோர் தலைமையில் திருவேங்கைவாசல், ஆவூர், திருமயம், காட்டுபாவா பள்ளிவாசல் ஆகிய பகுதிகளுக்கும் பேருந்துகளில் சுற்றுப் பயணம் செல்லவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் திரு.எம்.எம்.அப்துல்லா அவர்கள், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா அவர்கள், முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.கே.கே.செல்லப்பாண்டியன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா.சத்தியமூர்த்தி, வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, மாவட்ட சுற்றுலா அலுவலர் நெல்சன், க.நைனாமுகமது மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**